தினமணி

**விவசாயிகளிடமிருந்து தேங்காய்களை நேரடியாக கொள்முதல் செய்ய வலியுறுத்தல்**

First Published : 06 Jul 2010 12:03:24 PM IST

திருச்சி, ஜூலை 5: தென்னை விவசாயிகளிடமிருந்து தேங்காய்களை நேரடியாக அரசே கொள்முதல் செய்ய வேண்டும் என, கட்சி சார்பற்ற விவசாயிகள் சங்கம் கோரிக்கை விடுத்துள்ளது.

இந்தச் சங்கத்தின் சார்பில் உழவர் போராட்டத்தில் உயிர் நீத்த தியாகிகளுக்கு அஞ்சலி செலுத்தும் உழவர் தினப் பேரணி, மாநாடு திருச்சியில் திங்கள்கிழமை நடைபெற்றது.

திருச்சி காவிரிப் பாலத்திலிருந்து தொடங்கிய விவசாயிகள் பேரணிக்கு சங்கத்தின் தலைவரும், சட்டப்பேரவை முன்னாள் உறுப்பினருமான என்.எஸ். பழனிசாமி தலைமை வகித்தார். பொதுச் செயலர் புதுக்கோட்டை மணிவேல் முன்னிலை வகித்தார். இ.ஆர். மேல்நிலைப் பள்ளி, அண்ணா சிலை வழியாக மாநாட்டுத் திடலை பேரணி வந்தடைந்தது. இதைத் தொடர்ந்து நடைபெற்ற மாநாட்டுக்கு திருச்சி மாவட்ட விவசாயிகள் சங்கத் தலைவர் ராஜமாணிக்கம் தலைமை வகித்தார்.

கட்சி சார்பற்ற விவசாயிகள் சங்கத்தின் மாவட்டத் தலைவர் அமீர்பாட்ஷா முன்னிலை வகித்தார்.

இந்த மாநாட்டில் ஆடிட்டர் எஸ். குருமூர்த்தி, இயற்கை வேளாண் விஞ்ஞானி கோ. நம்மாழ்வார், கள் இயக்க ஒருங்கிணைப்பாளர் செ. நல்லசாமி, தமிழ்த் தேசியக் கட்சித் தலைவர் ஆடிட்டர் பாலசுப்பிரமணியன், கட்சி சார்பற்ற தமிழக விவசாயிகள் சங்கத்தின் செயலர் அப்பாவு பாலாண்டார், திருச்சி மாவட்ட இணைத் தலைவர் பி. முத்து, செயலர் எஸ். ஆரோக்கியராஜ், பாரதீய கிசான் சங்கத்தின் மாநிலச் செயலர் பி. அய்யாக்கண்ணு, தீட்சிதர் பாலசுப்பிரமணியன் உள்ளிட்டோர் பங்கேற்று பேசினர்.

மாநாட்டில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள்:

விவசாயிகளிடமிருந்து நெல், கரும்பை கொள்முதல் செய்வது போல, தென்னை விவசாயிகளிடமிருந்து தேங்காய்களை அரசே கிலோவுக்கு ரூ. 20 என நிர்ணயித்து கொள்முதல் செய்ய வேண்டும்.

நெல்லுக்கு குவிண்டாலுக்கு ரூ. 2000-ம், கரும்புக்கு டன் ரூ. 2,500-ம் விலை நிர்ணயிக்க வேண்டும். அதுபோல பசும்பாலுக்கு லிட்டர் ரூ. 20-ம், எருமைப்பாலுக்கு ரூ. 25-ம் நிர்ணயித்து கொள்முதல் செய்ய வேண்டும்.

சொத்திற்கோ, பணத்திற்கோ உச்சவரம்பு நிர்ணயிக்காமல் விவசாய நிலத்திற்கு மட்டும் உச்ச வரம்பு 15 ஏக்கர் என நிர்ணயித்துவிட்டு, சலுகை வழங்குவதில் பெரிய, சிறிய, குறு விவசாயி என தரம் பிரிப்பதை அரசு கைவிட வேண்டும்.

மேற்கு நோக்கி பாயும் ஆழ் கடலில் வீணாகக் கலக்கும் கேரள ஆறுகளை கிழக்கே திருப்பி தமிழகத்தின் வறண்ட பகுதிகளுக்கு நீர்ப்பாசனம் அளிக்க வழிவகை செய்ய வேண்டும்.
முல்லைப் பெரியாறு, பாம்பாறு, வைப்பாறு பிரச்னைக்கு மத்திய, மாநில அரசுகள் நிரந்தர தீர்வு காண வேண்டும்.

காவிரியிலிருந்து தமிழகத்தின் வறண்ட மாவட்டங்களுக்கு குடிநீர் எடுத்துச் செல்லப்படுவதால் திருச்சி மாவட்டத்தில் முசிறிக்கு கிழக்கிலிருந்து கல்லணை வரை கோடைகாலத்தில் ஆறு வற்றிவிடுகிறது.
எனவே, முசிறியிலிருந்து கல்லணை வரையிலுள்ள 60 கி.மீட்டர் தொலைவில் 10 கி.மீ.க்கு ஒரு தடுப்பணை வீதம் தடுப்பணைகளைக் கட்டிக் கொடுக்க வேண்டும் என்பன உள்ளிட்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

**விவசாயக் கடனை முழுமையாக தள்ளுபடி செய்ய வலியுறுத்தல்**

First Published : 07 Jul 2010 08:48:45 AM IST

ஈரோடு, ஜூலை 6: தேசியமயமாக்கப்பட்ட வங்கிகளில் விவசாயிகள் பெற்றுள்ள கடனை முழுமையாக தள்ளுபடி செய்ய வேண்டும் என தமிழக விவசாயிகள் சங்கம் கோரிக்கை விடுத்துள்ளது.

தியாகிகள் நினைவுக் கூட்டம், மாநிலத் தலைவர் கே.சி.ரத்தினசாமி தலைமையில் பெருமாநல்லூரில் உள்ள தியாகிகள் நினைவிடத்தில் திங்கள்கிழமை நடைபெற்றது.

நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள்:

÷ மொழிப்போர் தியாகிகளுக்கு வழங்கப்படும் அரசு சலுகைகள் அனைத்தும் விவசாய போராட்டத்தில் பங்கேற்று உயிரிழந்த விவசாயிகளின் குடும்பத்தினருக்கும் வழங்க வேண்டும்.
அயல்நாட்டு விளைப் பொருட்கள் இந்தியாவில் குவிக்கப்படுவதை தடுத்திடு6ம் வகையில் உலக வர்த்தக நிறுவனத்தில் சேர விவசாயத்திற்கு விலக்கு அளிக்க வேண்டும்.

தேசியமயமாக்கப்பட்ட வங்கிகளில் விவசாயிகள் வாங்கியக் கடனை மத்திய அரசு முழுமையாக தள்ளுபடி செய்வதோடு, வட்டியில்லா கடனை மீண்டும் வழங்க வேண்டும். வெட்டுக்கூலி மற்றும் லாரி வாடகையினை ஆலை நிர்வாகங்களே ஏற்றுக்கொண்டு கரும்பு டன் ஒன்றுக்கு ரூ.3000 வழங்க வேண்டும்.

÷கரும்புக்கான கொள்முதல் வரியை ரத்து செய்வதோடு, அத்தியாவசியப் பொருட்கள் பாதுகாப்பு சட்டத்திலிருந்தும் விலக்கு அளிக்க வேண்டும்.

பயிர்காப்பீட்டு திட்டம் விவசாயிகள் அனைவருக்கும் பயன்பெறும் வகையில் மாற்றியமைக்கப்பட வேண்டும். கலைஞர் காப்பீட்டுத் திட்டத்தின் மூலம் விவசாயிகள் பயன்பெற உரிய திருத்தங்களை அறிவிக்க வேண்டும். விவசாயிகள் கூட்டுறவு வங்கிகளில் வாங்கியுள்ள பண்ணைச் சாராக் கடன்களையும் முழுமையாக தள்ளுபடி செய்ய வேண்டும்.

÷ தமிழகத்தில் அயல்நாட்டு மதுபான வகைகள் விற்பனை செய்யப்படும் வரை, கள்ளுக் கடைகளையும் திறக்க அனுமதி அளிக்க வேண்டும்.

60 வயதுக்கு மேற்பட்ட விவசாயிகள் மற்றும் விவசாயத் தொழிலாளர்களுக்கு மாதம் ரூ.5000 ஓய்வூதியம் வழங்க வேண்டும்.

மாநிலப் பொதுச் செயலர் ஈ.வரதராஜன், பொருளாளர் என்ஆர்.நஞ்சுகுட்டி கவுண்டர், கொள்கைப் பரப்புச் செயலர் எ.வாசுதேவன் மற்றும் மாவட்ட நிர்வாகிகள் பங்கேற்றனர்.

**மேட்டூர் அணை நீர்மட்டம் 79.87**

First Published : 07 Jul 2010 08:14:06 AM IST

சேலம், ஜூலை 6: மேட்டூர் அணையின் நீர்மட்டம் செவ்வாய்க்கிழமை மாலை 4 மணி நிலவரப்படி 79.87 அடியாக இருந்தது. அணைக்கு விநாடிக்கு 530 கன அடி நீர் வந்து கொண்டிருந்தது. அணையிலிருந்து விநாடிக்கு 1,004 கன அடி வீதம் தண்ணீர் திறந்துவிடப்பட்டது. அணையின் நீர் இருப்பு 41.82 டி.எம்.சி.

**நெல், சோளம் விதைகள் போதிய அளவு இருப்பு**

First Published : 06 Jul 2010 11:30:51 AM IST

காரியாபட்டி. ஜூலை 5: நெல், சோளம் உள்ளிட்ட பல்வேறு தானியங்களின் விதைகள் போதிய அளவில் இருப்பில் உள்ளதாக நரிக்குடி வேளாண்மை உதவி இயக்குநர் ராஜேந்திரன் தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் விடுத்துள்ள அறிக்கை:

திருச்சுழி பகுதி விவசாயிகளுக்கு நெல், சோளம், உளுந்து, பாசிப்பயறு, பருத்தி விதைகள் போதுமான அளவு, எம்.ரெட்டியபட்டி, திருச்சுழி, பரளச்சி வேளாண்மை விரிவாக்க மையங்களில் இருப்பில் உள்ளதாக, அவர் தெரிவித்தார்.

**வேளாண் பொருட்கள் கண்காட்சி கோவையில் நாளை துவக்கம்**

First Published : 07 Jul 2010 08:38:03 AM IST

கோவை, ஜூலை 6: கோவையில் "அக்ரி எக்ஸ்போ 2010' என்னும் வேளாண் பொருட்கள் கண்காட்சி, பீளமேடு சுகுணா திருமண மண்டபத்தில் வியாழக்கிழமை முதல் ஜூலை 11-ம் தேதி வரை நடைபெறுகிறது.

இது குறித்து இன்டர்பேஸ் டிரேட் ஃபேர் நிறுவனத்தின் தலைவர் வெங்கடேஷ் செவ்வாய்க்கிழமை வெளியிட்ட அறிக்கை:

கோவையில் 11 ஆண்டுகளாக "அக்ரி எக்ஸ்போ' கண்காட்சி நடத்தப்பட்டு வருகிறது. விவசாயத்துக்குத் தேவையான நவீனக் கருவிகள் இக் கண்காட்சியில் இடம்பெறும். நவீனத் தொழில்நுட்பங்கள், புதிய சாகுபடி முறைகள், அறுவடைக்குப் பிந்தைய விளைபொருள் நிர்வாகம், விளைபொருட்களை சந்தைப்படுத்துதல் குறித்த பல்வேறு தகவல்களை இக் கண்காட்சியில் அறிந்துகொள்ள முடியும்.

இக் கண்காட்சியில் விவசாயிகள் மட்டுமன்றி காப்பி, தேயிலைத் தோட்ட அதிபர்கள், தொழில்நுட்ப நிபுணர்கள், விவசாய உபகரணத் தயாரிப்பாளர்கள், வியாபாரிகள், ஏற்றுமதி மற்றும் இறக்குமதியாளர்கள், அரசு அதிகாரிகள், அரசு சாரா அமைப்பு நிர்வாகிகள் பங்கேற்று ஆலோசனைகளை வழங்குவார்கள்.

இக் கண்காட்சியை தமிழ்நாடு வேளாண் பல்கலைக்கழகத் துணைவேந்தர் பி.முருகேச பூபதி வியாழக்கிழமை துவக்கிவைக்கிறார். இக் கண்காட்சியில் 100-க்கு மேற்பட்ட அரங்குகள் அமைக்கப்பட்டுள்ளன.

÷தோட்டக்கலை, மலர் வளர்ப்பு, இயற்கை வேளாண்மை, கிராம நுகர்வோர் பொருட்கள், பண்ணை இயந்திரம், கால்நடை மற்றும் மீன் வளர்ப்பு, விதை மற்றும் உயிரியியல் தொழில்நுட்பம், உரங்கள் மற்றும் ஊட்டச்சத்துகள், தீவனத் தயாரிப்புகள் உள்ளிட்ட பல்வேறு துறை சார்ந்த நிறுவனங்கள் இக் கண்காட்சியில் அரங்குகளை அமைக்கின்றன.

டிராக்டர்கள், டில்லர்கள், உரங்கள், நுண்ணியிர் உரங்கள், நீர்ப்பாசன கருவிகள், சொட்டுநீர்ப் பாசனக் கருவிகள், பால் கறக்கும் கருவி, கால்நடை மருத்துவப் பொருட்கள், மூலிகைச் செடிகள், வீட்டுத்தோட்டப் பொருட்கள் இக் கண்காட்சியில் கிடைக்கும். விவசாய காப்பீட்டுத் திட்டங்கள் தொடர்பான தகவல்களையும் பெறலாம்.

**குருணை வடிவ யூரியாவால் அதிக நன்மை**

First Published : 06 Jul 2010 12:29:13 PM IST

புதுக்கோட்டை, ஜூலை 5: விவசாயிகள் பயிர்களுக்கு குருணை வடிவ யூரியாவை பயன்படுத்தினால் அதிக நன்மைகள் கிடைக்கும் என வேளாண் துறையினர் தெரிவித்துள்ளனர்.

இதுகுறித்து புதுக்கோட்டை வேளாண் உதவி இயக்குநர்(தரக் கட்டுப்பாடு) (பொ) எஸ். ராஜசேகரன் வெளியிட்ட செய்திக்குறிப்பு:

புதுக்கோட்டை மாவட்டத்தில் தற்போது குறுவை மற்றும் மானாவாரி நிலக்கடலை சாகுபடிக்கு விவசாயிகள் தயாராகி வருகின்றனர். அவர்களுக்குத் தேவையான அனைத்து உரங்களும் தனியார், கூட்டுறவு விற்பனை நிலையங்களில் விற்கப்படுகின்றன.

தற்போது யூரியா உரம் குருணை வடிவில் கிடைக்கிறது. இதை விவசாயிகள் பயன்படுத்தத் தயங்குவதாகத் தெரிகிறது. ஆனால், அது தவறான கருத்து. குருணை குருணை வழவ யூரியாவின் நன்மைகள்:

குருணை வடிவ யூரியாவில் உள்ள தார்ச் சத்தும், சாதாரண யூரியாவில் உள்ள தார்ச் சத்தும் 46 சதம்தான். குருணை வடிவ யூரியாவில் உள்ள தார்ச்சத்து மிகவும் மெதுவாகவும், சீராகவும் நீண்ட நாள்களுக்குப் பயிருக்குக் கிடைக்கிறது.

இதனால் பயிர் நீண்ட நாள்களுக்குப் பசுமை மாறாமல் இருக்கும். இதனால் தார்ச்சத்து பயன்படுத்தும் அளவும் குறைகிறது. ஆனால், சாதாரண யூரியாவை இடும்போது, உடனடியாக அது கரைவதால் தார்ச் சத்து நீரிலிருந்து சுலபமாக ஆவியாகி அதிகமாக வீணாக வாய்ப்புள்ளது.

குருணை வடிவில் யூரியா இருப்பதால் பயிர்களுக்குத் தெளிப்பது மிகவும் எளிது. மேலும், குருணை வடிவ யூரியாவில் ஈரப்பதம் குறைவாக இருப்பதால் கட்டியாவதும் இல்லை. திறந்து வைத்திருக்கும் நிலையில், காற்றில் உள்ள ஈரப்பதத்தை உறிஞ்சி தண்ணீராக மாறுவதும் இல்லை.

சாதாரண யூரியாவைவிட இது எடை அதிகமாக இருப்பதால், பயிர்களுக்கு இடும்போது காற்று மற்றும் நீரால் அடித்துச் செல்லப்படுவதில்லை. ஆனால், சாதாரண யூரியா துகள்களாக இருப்பதால் இலையின் மேல்பரப்பில் படிந்து பயிர்களுக்குச் சேதத்தை உண்டாக்கும். எனவே, அதிக பயனுள்ள குருணை வடிவ யூரியாவைப் பயன்படுத்தி கூடுதல் மகசூல் பெறலாம்.

மேலும், இதைப் போலவே டிஏபி மற்றும் 20-20-0-13 காம்ப்ளக்ஸ் உரங்களை விவசாயிகள் வாங்கும்போது, குறிப்பிட்ட உர நிறுவனத் தயாரிப்புகளை மட்டுமெ விரும்புகின்றனர். அதுவும் தவறானது. அனைத்து நிறுவன உரங்களின் தரமும் சத்துகளின் அளவும் ஒரே அளவிலேயே இருக்கும். எனவே, குறிப்பிட்ட நிறுவனத் தயாரிப்புகளை பயன்படுத்தினால்தான் நல்லது எனக் கருதவேண்டியது இல்லை.

விவசாயிகள் பயிர்களுக்குத் தேவையான உரங்களை மண் பரிசோதனை செய்து, அதன் ஆய்வு முடிவின்படி தேவையான உரங்களை மட்டும் இட்டு, உற்பத்தியை அதிகரிக்கலாம் எனத் தெரிவித்துள்ளார்.

தினமலர்

**தோட்டக்கலை பண்ணை தொழிலாளர்கள் ஆர்ப்பாட்டம்**

புதுக்கோட்டை: புதுக்கோட்டையில் தோட்டக்கலை பண்ணை தொழிலாளர் சங்கம் சார்பில் கோரிக்கைகளை வலியுறுத்தி ஆர்பாட்டம் நடந்தது.தோட்டக்கலைத்துறை துணை இயக்குனர் அலுவலகம் முன் நடந்த ஆர்பாட்டத்துக்கு மாவட்ட துணைத் தலைவர் அரசப்பன் தலைமை வகித்தார். ஏ.ஐ.டி.யு.சி., மாவட்டச் செயலாளர் சிங்கமுத்து, விவசாய தொழிற்சங்க மாவட்டச் செயலாளர் சுந்தர்ராஜன், பண்ணை தொழிலாளர் சங்க மாவட்டச் செயலாளர் செல்வராசு, இந்திய கம்யூனிஸ்ட் நகரச் செயலாளர் ராமச்சந்திரன் உட்பட சங்க நிர்வாகிகள் மற்றும் பண்ணைத் தொழிலாளர்கள் பலர் பங்கேற்றனர்.அரசு தோட்டக்கலைத் துறை பண்ணைத் தொழிலாளர்களுக்கு பிரதி மாதம் 10ம் தேதிக்குள் ஊதியம் வழங்க வேண்டும், பண்ணைத் தொழிலாளர்களை பணி நிரந்தரம் செய்து வரையறுக்கப்பட்ட ஊதியம் வழங்க வேண்டும், தினக்கூலித் தொழிலாளர்களை கொத்தடிமை போல் வைத்து வேலை வாங்குவதை கைவிட வேண்டும், பெண் தொழிலாளர்களை அவமரியாதை செய்யும் போக்கை கைவிடவேண்டும் உள்ளிட்ட கோரிக்கைகள் வலியுறுத்தப்பட்டன.

**விவசாயக்கடனுக்கு முன்னுரிமை வழங்கப்படும் பஞ்சாப் நேஷனல் வங்கி கள பொது மேலாளர் தகவல்**

பெரம்பலூர்: ""விவசாய கடன்களுக்கு முன்னுரிமை வழங்கப்பட்டு வருகிறது," என பஞ்சாப் நேஷனல் வங்கியின் களபொது மேலாளர் ரெங்கநாதன் தெரிவித்தார்.இது குறித்து பெரம்பலூரில் நிருபர்களுக்கு அவர் அளித்த பேட்டி:
பஞ்சாப் நேஷனல் வங்கி 1969ல் இந்திய பிரதமர் இந்திராகாந்தி தொடங்கி வைத்தார். 4 லட்சத்து 35 ஆயிரம் கோடி முதலீட்டில் ஐந்தாயிரம் கிளைகளுடன் தேசியமயமாக்கப்பட்ட வங்கிகளில் முதலிடத்தில் சிறப்பாக செயல்படுகிறது. மூவாயிரத்து 500 ஏ.டி.எம்., சென்டர்கள் உள்ளன. ஆந்திரா, கேரளா, கர்நாடகா, தமிழ்நாடு ஆகிய மாநிலங்களில் மட்டும் 410 கிளைகள் உள்ளன. தமிழ்நாட்டில் 134 கிளைகள் உள்ளன.தமிழகத்தில் திருச்சி, சென்னை இரண்டு மண்டலங்களாக செயல்படுகிறது. கல்வி கடன் முழுமையாக வழங்கி வருகிறோம். ஆறு லட்சம் ரூபாய் வரை எவ்வித நிபந்தனையும் இன்றி வழங்குகிறோம். 2010ம் ஆண்டில் மார்ச் மாதம் வரை 38 கோடி கல்வி கடனாக வழங்கியுள்ளோம். தனலட்சுமி சீனிவாசன் கல்லூரி மாணவ, மாணவிகளுக்கு கல்வி கடனாக இதுவரை 37 கோடி ரூபாய் வழங்கியுள்ளோம்.

ஆரோக்கியா பால் கட்சன் நிறுவனம் மூலம் 700 கறவை மாடு லோன் வழங்கியுள்ளோம். இந்தாண்டுக்குள் இரண்டாயிரம் கறவை மாடு லோன் வழங்க திட்டமிட்டுள்ளோம். சிறு, குறு தொழில் தொடங்க கடனுதவி வழங்கிறோம். "வேளாண் பெரு க வேண்டுவன செய்வோம்' என்ற தாரகமந்திரத்தை கொண்டு விவசாயிகளுக்கு வேண்டுகிற கடனுதவி வழங்கி வருகிறோம்.பிள்ளையார்பட்டியில் உழவர் பயிற்சி மையம் இயங்கி வருகிறது. இம்மையத்தில் பயிற்சி பெற வரும் விவசாயிகள் அனைவருக்கும் போக்குவரத்து செலவு, உணவு, தங்கும் வசதி அனைத்தும் இலவசமாக அளிக்கப்படுகிறது.சிறுகனூர், தேவக்கோட்டை, தர்மபுரி, விருதுநகர், கிருஷ்ணகிரி ஆகிய ஊர்களில் புதிய கிளைகள் விரைவில் தொடங்கப்பட உள்ளது. இந்தாண்டு 52 ஏ.டி.எம்., சென்டர் திறக்கப்பட உள்ளது. 25 ஆண்டு கால அவகாசத்துடன் வீடு கட்ட லோன் தருகிறோம். 70 வயது வரை எட்டு சதவீத வட்டியில் கடனுதவி வழங்குகிறோம்.
பத்து வயது மாணவர்கள் முதல் ஜீரோ பேலன்ஸில் சேமிப்பு கணக்கு தொடங்கும் வசதி உள்ளது. டெபிட் கார்டு வழங்கிறோம். இன்று (நேற்று) சிறந்த மதிப்பெண்கள் பெற்ற பள்ளி மற்றும் கல்லூரி மாணவர்களுக்கு பரிசு மற்றும் கல்விக்கடன் பெறுவதற்கான அனுமதி கடிதம் வழங்கினோம்.இவ்வாறு அவர் கூறினார்.பேட்டியின்போது, கோட்ட மேலாளர் சோம வீரப்பன், உதவி பொது மேலாளர் மோகன், கிளை மேலாளர் தம்பிதுரை உள்ளிட்ட பலர் பங்கேற்றனர்.

**புவி வெப்பமாதல் விழிப்புணர்வு முகாம்**

கிள்ளை : சிதம்பரம் அடுத்த தெற்கு பிச்சாவரம் மற்றும் டி.எஸ்.பேட்டையில் சுற்றுச்சூழல் பாதுகாப்பு இயக்கம் சார்பில் விவசாயிகளுக்கு புவி வெப்பமயமாதல் குறித்து விழிப்புணர்வு முகாம் நடந்தது. சுற்றுச்சூழல் பாதுகாப்பு இயக்க தலைவர் பன்னீர்செல்வம் தலைமை தாங்கினார். துணை செயலாளர் ராமநாதன் வரவேற்றார். ஊராட்சி தலைவர்கள் வாசுசரவணன், தமிழ்ச் செல்வன், இயக்க துணைத் தலைவர் சேது சுப்ரமணியன், பொரு ளாளர் கலியபெருமாள் முன்னிலை வகித்தனர். முகாமில் பங்கேற்ற விவசாயிகளுக்கு புவி வெப்பமயமாதல் குறித்து சிறப்பு பயிற்சி அளிக்கப்பட்டது. முகாமில் முன்னோடி விவசாயிகள் ரங்கநாதன், கணேசன், பாலகுமார் தங்கள் அனுபவங்களை பகிர்ந்து கொண்டனர். ஜெய்சங்கர் நன்றி கூறினார்.

**விவசாயிகள் குறை கேட்பு கூட்டம்**

கடலூர் : கடலூரில் விவசாயிகள் குறை கேட்பு மற்றும் ஆலோசனைக் கூட்டம் வேளாண்மை இணை இயக்குநர் அலுவலகத்தில் வரும் 9ம் தேதி நடக்கிறது. இது குறித்து கலெக்டர் அலுவலக செய்திக்குறிப்பு: விவசாயிகள் குறைகேட்பு மற்றும் ஆலோசனைக் கூட்டம் வேளாண்மை இணை இயக்குநர் அலுவலகத்தில் வரும் 9ம் தேதி காலை 10.30 மணிக்கு நடக்கிறது. கூட்டத்தில் தோட்டக் கலை, வேளாண் பொறியியல், வேளாண் விற்பனை மற்றும் வணிகம் விதை சான்று

மின் வாரியம், கால் நடை பராமரிப்பு, பொதுப் பணித் துறை, நீர்பாசன துறையைச் சேர்ந்த அலுவலர்கள் பங்கேற்கின்றனர். விவசாயிகள் கூட்டத்தில் பங்கேற்று தங்களது குறைகளை தெரிவிக்கலாம்.

**தென்னை கருப்பட்டி விலை 4 வாரமாக சரிவு**

கோபிசெட்டிபாளையம்:தென்னை கருப்பட்டி விலை மூன்று வாரமாக குறைந்து வந்த நிலையில், நேற்று முன்தினம் ஒரே நாளில் கிலோவுக்கு மேலும் 4.50 ரூபாய் குறைந்தது.திருப்பூர் மாவட்டம் குன்னத்தூர் கூட்டுறவு சங்கத்தில் வாரந்தோறும் திங்கள் கிழமை தென்னை மற்றும் பனை கருப்பட்டி ஏலம் நடந்து வருகிறது. கோபி, பெருந்துறை, கடத்தூர், டி.என்.பாளையம், பங்களாப்புதூர், சிறுவலூர், நம்பியூர், வெள்ளாங்கோவில், கள்ளிப்பட்டி பகுதியில் உற்பத்தி செய்யப்படும் கருப்பட்டி, குன்னத்தூர் கூட்டுறவு சங்கத்துக்கு விற்பனைக்கு கொண்டு வரப்படுகிறது.

கேரளாவில் சித்த மருந்து தயாரிப்புக்கு கருப்பட்டி முக்கிய தேவையாக இருப்பதால், தமிழகத்தை விட கேரள வியாபாரிகள் அதிகளவில் கருப்பட்டி வாங்கி செல்கின்றனர். புகையிலையை பதப்படுத்தவும் கருப்பட்டி பயன்படுகிறது. கேரளாவில் தென்மேற்கு பருவமழை துவங்கியுள்ளதால், அதிக நாட்கள் கருப்பட்டியை இருப்பு வைக்க முடியாது.இதனால், குன்னத்தூர் சங்கத்தில் நான்கு வாரமாக கருப்பட்டிக்கு குறைந்த விலைதான் கிடைக்கிறது. ஜூன் 14ம் தேதி ஒரு கிலோ தென்னை கருப்பட்டி 47.90 ரூபாயாகவும், 21ம்தேதி 46 ரூபாய், 28ம் தேதி 44 ரூபாயாக இருந்தது. நடப்பு வாரம் மேலும் 4.50 ரூபாய் குறைந்து, 39.50 ரூபாயாக விலை சரிந்துள்ளது.நடப்பு வாரம் 12 ஆயிரம் கிலோ தென்னை கருப்பட்டி விற்பனைக்கு வந்தது. நான்கு லட்சத்து 74 ஆயிரம் ரூபாய் மதிப்பில் தென்னை கருப்பட்டி வர்த்தகம் நடந்தது. பனை கருப்பட்டி 1,000 கிலோ விற்பனைக்கு வந்தது. பதநீர் உற்பத்தி குறைவால் கடந்த வாரத்தை விட வரத்து குறைந்திருந்தது. விலை கிலோவுக்கு 10 பைசா உயர்ந்து, 56 ரூபாய்க்கு விற்றது.தென்னை கருப்பட்டிக்கு தொடர்ந்து குறைந்த விலை கிடைப்பதாலும், பனை கருப்பட்டி விலை உயராததாலும், உற்பத்தியாளர்கள் சோகத்தில் உள்ளனர்.து.இதுவரை, லக்காபுரம் இரண்டாம் வார்டுக்கு பூபதி என்பவர் மட்டும் வேட்பு மனுத்தாக்கல் செய்துள்ளார். வேறு எந்த வார்டுக்கும் எவரும் வேட்புமனு தாக்கல் செய்யவில்லை.

**பருத்தியில் காய் புழுக்களை தடுக்க வேளாண் உதவி இயக்குனர் யோசனை**

நாமக்கல்: "நாமக்கல் வட்டாரத்தில் பயிரிடப்பட்டுள்ள பருத்தி செடிகளில் காய் புழுக்களின் தாக்குதலை கட்டுப்படுத்த விவசாயிகள் முன்னெச்சரிக்கை நடவடிக்கை எடுக்க வேண்டும்' என, வேளாண் உதவி இயக்குனர் பேபிகலா தெரிவித்துள்ளார்.அவர் வெளியிட்ட அறிக்கை:கண்ணில்

தென்படும் முட்டைக் குவியல், கூட்டுப்புழு ஆகியவற்றை பொறுக்கி அழித்தல் வேண்டும். பூச்சிகள், நோய்களால் பாதிக்கப்பட்ட இலை, தண்டு, பூக்கள், காய்கள் ஆகியவற்றை அகற்றி அழிக்க வேண்டும். காய் புழுக்களின் அந்துப்பூச்சிகளை அழிக்க விளக்கு பொறிகள் வைத்தல் அவசியம்.

எந்த பூச்சியின் தாக்குதல் அதிகம் காணப்படுகிறது என்பதை கணக்கிட்டு அதற்கேற்ப தடுப்பு முறைகளை மேற்கொள்ளலாம். இனக்கவர்ச்சி பொறிகள் ஏக்கருக்கு ஆறு வீதம் வைப்பதால் ஆண் அந்துப்பூச்சிகளை கவர்ந்து அழிக்கலாம். இரண்டு சதுர அடி அளவுள்ள நீலநிற துணிகளை, ஏக்கருக்கு பத்து இடங்களில் மாலை நேரத்தில் விரித்து வைத்தால், அதனடியில் தங்கும் புழுக்களை மறுநாள் காலையில் எடுத்து அழித்து விடலாம்.டிரைக்கோரிம்மா ஒட்டுண்ணி ஒரு தடவைக்கு 10,000 வீதம் ஆறு முறை விட வேண்டும். இதைப் பருத்தி விதைத்த 40ம் நாளிலிருந்து ஆரம்பித்து 15 நாள் இடைவெளியில் மேற்கொள்ள வேண்டும்.

இவை காய்புழுக்களின் முட்டைகளின் மீது தன் முட்டைகளை இட்டு காய்ப்புழுக்கள் தோன்றாமல் தடுக்கும்.புரோடினியா புழுக்களை தடுக்க ஒரு ஏக்கருக்கு 200 வைரஸ் தாக்கிய புழுக்களின் திரவத்தை மில்லி டீப்பால் அல்லது வேப்பெண்ணெய் மற்றும் ஒரு கிலோ உருண்டை வெல்லம் ஆகியவற்றினை சுத்தமான 200 லிட்டர் நீரில் கலந்து மாலை வேளையில் கைத்தெளிப்பானால் 15 நாள் இடைவெளியில் மூன்று முறை தெளிக்க வேண்டும்.காய் புழுக்களின் தாக்குதல் 10 சதவீதம் தண்டு அல்லது சப்பை சேதத்தை ஏக்கருக்கு விளைவிக்கும்போது, பாசலோன் ஏக்கருக்கு 35 இ.சி., ஒரு லிட்டர் அல்லது ஏக்கருக்கு குயினால்பாஸ் 25 இ.சி., 800 மி.லி., அல்லது ஏக்கருக்கு கார்பரில் 50 சதவீதம் நனையும் தூள் ஒரு கிலோ மருந்துகளில் ஏதாவது ஒன்றை தெளிக்க வேண்டும்.இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

**கொப்பரை கிலோ ரூ.32.15**

பொள்ளாச்சி : நெகமத்தில் நடந்த கொப்பரை ஏலத்தில் ஒரு கிலோவுக்கு அதிகபட்சமாக ரூ.32.15 விலை கிடைத்தது. நெகமம் சுற்றுப்பகுதி விவசாயிகள் 10 பேர், ஒழுங்குமுறை விற்பனைக்கூட ஏலத்திற்கு 46 மூட்டை கொப்பரையை கொண்டு வந்தனர். மொத்தம் நான்கு வியாபாரிகள் கொப்பரையை தரம் பிரித்து ஏலம் கூறினர். ஒழுங்குமுறை விற்பனைக் கூட கண்காணிப்பாளர் சண்முகம் ஏலம் நடத்தினார்.முதல் தர கொப்பரை 15 மூட்டை ஏலம் விடப்பட்டதில், கிலோவுக்கு குறைந்தபட்சம் ரூ.30.75 முதல், அதிகபட்சம் ரூ.32.15 வரை விலை கிடைத்தது. இரண்டாம் தர கொப்பரை 31 மூட்டை ஏலம் விடப்பட்டதில், கிலோவுக்கு குறைந்தபட்சம் ரூ.20 முதல், அதிகபட்சம் ரூ.29.25 வரை விலை கிடைத்தது. அதிகாரிகள் கூறுகையில், "மழை பெய்வதால்,

கொப்பரை உற்பத்தி பாதிக்கப்பட்டுள்ளது. அதனால் ஏலத்திற்கு கொப்பரை வரத்து கடந்த நான்கு வாரங்களாக குறைந் துள்ளது. கடந்த வாரத்துடன் ஒப்பிடும் போது, கொப்பரை வரத்து 50 சதவீதம் குறைந்துள்ளது. முதல் தர கொப்பரை கிலோவுக்கு 40 பைசா விலை சரிந்துள்ளது' என்றனர்.

**கடலை எண்ணெய் விலை உயர்வு**

மதுரை: நிலக்கடலை உற்பத்தி குறைந்துள்ளதால், கடலை எண்ணெய் விலை 15 கிலோ டின்னுக்கு 30 ரூபாய் அதிகரித்துள்ளது.கடந்த வாரம் 1190 ரூபாய்க்கு விற்ற கடலை எண்ணெய் நேற்று 1220 ரூபாய்க்கு விற்கப்பட்டது. எண்ணெய் வியாபாரிகள் சங்க முன்னாள் செயலாளர் கிருஷ்ணமூர்த்தி கூறியதாவது :இரு வாரங்களாக விலை அதிகரித்து வந்த பாமாயில், நேற்று குறைந்தது. கடந்த வாரம் 660 ரூபாய்க்கு விற்ற 15 கிலோ டின் பாமாயில் நேற்று 650 ரூபாய்க்கு விற்கப்பட்டது. நல்லெண்ணெய் 1170 ரூபாயில் இருந்து 1150 ரூபாய்க்கும், தும்பை நல்லெண்ணெய் 1700 ரூபாயில் இருந்து 1600 ரூபாய்க்கும் விற்கப்பட்டது.ரைஸ்பிரான் ஆயில் 670 ரூபாய், சூரியகாந்தி எண்ணெய் 800, தேங்காய் எண்ணெய் 990, வனஸ்பதி 740 ரூபாய் என்பதில் மாற்றமில்லை, என்றார்.

**மல்லிகை மலிந்தது**

மதுரை: மதுரையில் மல்லிகை வரத்து அதிகரித்துள்ளதால், விலை மலிவாக விற்கப்படுகிறது. நேற்று முன் தினம் 10 ரூபாய்க்கு விற்கப்பட்டது. பூ மார்க்கெட் சங்கத் தலைவர் சோ.ராமச்சந்திரன் கூறுகையில், ""நேற்று ஒரு கிலோ மல்லிகை 40-50 ரூபாய், கனகாம்பரம் 100, ரோஜா 30-40, பிச்சிப்பூ 80-70, செண்டுப்பூ 30, கோழிக் கொண்டை 40, மரிக்கொழுந்து 25, அரளி 30 ரூபாய்க்கு விற்கப்பட்டது,'' என்றார்.

**அரிசி விலை மாறவில்லை**

மதுரை: அரிசி ஆலை உரிமையாளர்கள் சங்க செயலாளர் சந்திரன் கூறியதாவது :கர்நாடக பொன்னி பழசு 38.50 ரூபாய், புதுசு 30 ரூபாய்க்கு விற்கப்படுகிறது. டீலக்ஸ் பொன்னி பழசு 32.50 ரூபாய்க்கும், புதுசு 25 ரூபாய்க்கும், வெள்ளை பொன்னி பழசு 35.50, புதுசு 27க்கும், செல்லப் பொன்னி பழசு 23.50, புதுசு 21க்கும் விற்கப்பட்டது.ஐ.ஆர். இருபது பழசு 23 ரூபாய், புதுசு 21லிருந்து 22 ரூபாய், ஐ.ஆர். 36 பழசு 22 ரூபாய், புதுசு 20லிருந்து 21 ரூபாய்க்கு விற்கப்பட்டது. பச்சரிசி சூப்பர் சன்னம் முதல் ரகம் 37 ரூபாய், அடுத்த ரகம் 30, புதுசு 28லிருந்து 29 ரூபாய், மாவு பச்சரிசி பழசு 21, பிரியாணி அரிசி முதல் ரகம் 53க்கு விற்கப்படுகிறது, என்றார்.

---

**வரத்து குறைவால் தக்காளி விலை அதிகரிப்பு**

மதுரை: தேனி மாவட்டத்தில் இருந்து வரத்து குறைந்துள்ளதால், மதுரை சென்ட்ரல் மார்க்கெட்டில் தக்காளி விலை தொடர்ந்து அதிகரிக்கிறது.
சங்கத் தலைவர் முருகன் கூறியதாவது :போதிய மழையின்மையால் உற்பத்தி பாதித்து வரத்து குறைந்துள்ளது. சில வாரங்களாக தக்காளி ஒரு கிலோ 40 ரூபாய்க்கும், உருட்டு தக்காளி 28 ரூபாய்க்கும் விற்கப்படுகிறது. மற்ற காய்கறி விலை சீராக உள்ளது. ஒரு கிலோ கத்தரிக்காய் 14, வெள்ளை கத்தரிக்காய் 10, பூசணி 7, சுரைக்காய் 6, புடலங்காய் 10, வெண்டைக்காய் 10, கேரட் 18, பீட்ரூட் 15, காலிபிளவர் 7-10, முட்டைகோஸ் 10, உருளைகிழங்கு 10, சேனைகிழங்கு 30, கருணை கிழங்கு 35, பாகற்காய் 15, சிறியது 20, வெங்காயம் 12, சிறியது 30, இஞ்சி 60, பீன்ஸ் 25, பட்டர் பீன்ஸ் 40, சோயா பீன்ஸ் 30, பட்டாணி 50, கீரை வகைகள் 10, புதினா 7, கறிவேப்பிலை 12, கொத்தமல்லி 7, அவரைக்காய் 20, நூக்கல் 10, முருங்கைக்காய் 20, கொத்தவரை 7, முள்ளங்கி 10, பச்சை மிளகாய் 25, ஆந்திர பச்சை மிளகாய் 20 ரூபாய்க்கு விற்கப்படுகிறது, என்றார்.சென்ட்ரல் மார்க்கெட் விலைக்கும், மற்ற இடங்களில் விற்கப்படும் காய்கறி விலைக்கும் சம்பந்தமில்லை.

**பருவமழை தாமதம்: பருப்பு விலை உயர்வு**

மதுரை: மதுரை பகுதிகளில் பருவமழை தாமதம் ஆவதால், பருப்பு வரத்து குறைந்து, விலை அதிகரித்துள்ளது. பருப்பு வியாபாரிகள் சங்கச் செயலாளர் வெற்றிச்செல்வன் கூறியதாவது :கடந்த வாரம் நூறு கிலோ உளுந்தம் பயறு(மியான்மர்) 5100 ரூபாய் முதல் 5600 ரூபாய் வரை விற்கப்பட்டது. இந்த வாரம் 5500லிருந்து 5700க்கும், உள்ளூர் பயறு 5600லிருந்து 5700க்கும் விற்கப்பட்டது. பருப்பு கடந்த வாரம் 6500 முதல் 7500க்கும், இந்த வாரம் 6500 முதல் 7600க்கும் விற்கப்பட்டது.வெள்ளை துவரை பயறு 4400லிருந்து 4450க்கும், சிவப்பு பயறு 4500லிருந்து 4550க்கும், பருப்பு 5800 முதல் 6100க்கும், இந்த வாரம் 5900லிருந்து 6200க்கும் விற்கப்பட்டது. பாசி பயறு 5200 முதல் 5500க்கும், இந்த வாரம் 5300லிருந்து 5700க்கும் விற்கப்பட்டது. பருப்பு 7700 முதல் 7800க்கும், இந்த வாரம் 7300 முதல் 7800க்கும் விற்கப்பட்டது. கடலை பயறு 2350லிருந்து 2400க்கும், பருப்பு 2800லிருந்து 2850க்கும், பட்டாணி பயறு 1550லிருந்து 1600க்கும், பருப்பு 1800லிருந்து 1850க்கும் விற்கப்பட்டது, என்றார்.

**வாழை சாகுபடிக்கு மானியம்:தோட்டக்கலை அதிகாரி தகவல்**

தென்காசி:செங்கோட்டை பகுதியில் வாழை சாகுபடிக்கு மானியம் வழங்கப்படுகிறது.இதுகுறித்து செங்கோட்டை தோட்டக்கலை உதவி இயக்குநர் பாலசுப்பிரமணியன் விடுத்துள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது:செங்கோட்டை வட்டாரத்தில் தற்போது வாழை பயிர் அதிக பரப்பளவில்

சாகுபடி செய்யப்பட்டுள்ளது. வாழை பயிருக்கு தோட்டக்கலை துறையின் மூலம் மானியம் வழங்கப்படுகிறது. செங்கோட்டை வட்டாரத்தில் தற்போது வாழை சாகுபடி செய்துள்ள விவசாயிகள் வி.ஏ.ஓ.விடம் 10க்கு1 அடங்கல் பெற்று, ரேஷன் கார்டு ஜெராக்ஸ், சாகுபடியாளரின் பாஸ்போர்ட் சைஸ் போட்டோ இரண்டு, 5 மாத வாழை வயலுக்குள் விவசாயி நின்வாறு உள்ள போட்டோ இரண்டு உள்ளிட்ட ஆவணங்களுடன் செங்கோட்டை தோட்டக்கலை அலுவலகத்தில் வரும் 23ம் தேதிக்குள் பதிவு செய்து கொள்ள வேண்டும்.

புதிய பரப்பில் வாழை சாகுபடி செய்துள்ள விவசாயிகள் நேரடியாக செங்கோட்டை தோட்டக்கலை அலுவலகத்தில் பதிவு செய்து அரசு மானியத்தை பெற்று பயன்பெறலாம் என தோட்டக்கலை உதவி இயக்குநர் பாலசுப்பிரமணியன் அறிக்கையில் கூறியுள்ளார்.

**மூலிகை பயிர் சாகுபடி பரப்பு தூத்துக்குடியில் 2 மடங்கு உயர்வு**

தூத்துக்குடி : மூலிகை பயிர் சாகுபடி பரப்பு தூத்துக்குடியில் 2 மடங்கு உயர்ந்துள்ளது. இத ற்கு முதல் கட்டமாக ரூ.8 லட்சம் அனுமதிக்கப்பட் டுள்ளது.தூத்துக்குடி மாவட்டத்தில் தேசிய மூலிகை பயிர் சாகுபடி பரப்பு இரண்டு மடங்காக அதிகரித்துள்ளது. நடப்பாண்டிற்கு முதல் கட்டமாக 8 லட்ச ரூபாய் அரசு மானியம் வழங்கியுள்ளது.தூத்துக்குடி மாவட்டத்தில் கடந்த ஆண்டு வரை மருத்துவ பயிரான சென்னா 494 ஹெக்டேர் பரப்பில் சாகுபடி செய்யப்பட்டு வந்தது. மருத்துவ பயிரான சென்னா செம்மண் நிலத்தில் மானாவாரி பயிர் சாகுபடி செய்யப்பட்டு வருகிறது.நவம்பர், டிசம்பர் மாதங்களில் விதைப்பு செய்து பிப்ரவரி, மார்ச் மாதங்களில் அறுவடை செய்யப்படுகிறது. தேசிய மூலிகைப் பயிர்கள் வளர்ச்சி இயக்கம் மூலம் அவுரி சாகுபடி பரப்பினை அதிகரித்தது. இதன் உற்பத்தியை பெருக்க அவுரி சாகுபடி விவசாயிகளுக்கு ஹெக்டேர் ஒன்றுக்கு 5 ஆயிரம் மானியம் வழங்கப்படுகிறது. தூத்துக்குடி மாவட்டத்தில் அவுரி சாகுபடி பரப்பு 500 ஹெக்டேர் பரப்பில் இருந்து நடப்பாண்டில் 1043 ஹெக்டேராக அதிகரித்துள்ளது.நடப்பாண்டில் இந்த திட்டத்தினை செயல்படுத்த தேசிய மூலிகைப் பயிர்கள் வளர்ச்சி இயக்கம் முதல் தவணையாக இம் மாவட்டத்திற்கு 8 லட்ச ரூபாய் மானியம் வழங்கியுள்ளது.
தோட்டக்கலைத்துறை துணை இயக்குநர் ஜோசப் கருணாநிதி இத்தகவலை தெரிவித்துள்ளார்.

**சாயர்புரம் அருகே தண்ணீரின்றி பயிர்கள் கருகும் அபாயம்**

சாயர்புரம்: சாயர்புரம் அருகே உள்ள பேய்குளம் பாசன பகுதிகளில் தண்ணீரின்றி நெற்பயிர்கள் கருகி வருகின்றன. உடனடியாக அணையில் இருந்து தண்ணீர் திறந்து விட்டு கருகும் பயிர்களை காப்பாற்ற நடவடிக்கை எடுக்க வேண்டும் என விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

ஸ்ரீவைகுண்டம் வடகால் பாசன பகுதிகளில் உள்ளது பேய்குளம். இங்கு சிவத்தையாபுரம் மற்றும் அதன் சுற்று வட்டார பகுதிகளில் உள்ள ஏராளமான விவசாயிகள் ஆயிரக்கணக்கான ஏக்கர்களில் விவசாயம் செய்து வருகின்றனர். தற்போது இக்குளம் நீரின்றி வறண்டு கிடப்பதால் விவசாயம் கேள்விக் குறியாகியுள்ளது. கடந்த மூன்று மாதங்களுக்கு முன் இவர்கள் முதல் போகம் நெல் அறுவடை செய்தனர். தொடர்ந்து இப்பகுதிகளுக்கு நீர் வழங்கும் பாபநாசம் அணையில் போதுமான அளவு நீர் இருந்ததால் இரண்டாம் போகம் நெல் பயிரிட்டனர்.

ஏராளமாக செலவு செய்து நெற்பயிரை கண்ணும் கருத்துமாக வளர்த்து வந்தனர். ஆனால் அணையில் இருந்து நீர் வராததால் குளம் வறண்டு போனது. இதனால் சுமார் இரண்டரை மாதம் கண்ணும் கருத்துமாக பாதுகாத்து வந்த நெற்பயிர்கள் பொதி பருவத்தில் கருகும் நிலைக்கு தள்ளப்பட்டுள்ளன. இது குறித்து இப்பகுதிகளில் விவசாயம் செய்து வரும் விவசாயிகள் ராஜன், சுரேந்திரன், அம்ஸ்ராஜ் மற்றும் ஜெயசிங் ஆகியோர் கூறியதாவது, தற்போது நாங்கள் ஸ்ரீவைகுண்டம் வடகால் பாசனத்தில் உள்ள பேய்குளம் பாசன பகுதியான இருவப்பபுரம் தொட்டிபாலம் பகுதியில் இரண்டாம் போகம் நெல் பயிரிட்டுள்ளோம்.

நெற்பயிருக்கு நீர் பாய்ச்சி, பேணி பாதுகாத்து வந்தோம். ஆனால் திடீரென அணையில் இரு ந்து நீர் வரத்து அறவே நின்று போனதால் குளம் வறண்டு போனது. இதனால் நாங்கள் கடந்த 20 நாட்களாக நெற்பயிருக்கு நீர் பாய்ச்ச முடியவில்லை. தற்போது பயிர் பொதி பட்டத்தில் இருப்பதால் தினமும் நீர் விட வே ண்டியது அவசியம். இல்லையெனில் நெல்லுக்கு பதில் நெற் புதர்களை அறுவடை செய்ய நேரிடும். மே லும் இந்நிலை நீடித்தால் பயிர்களே கருகி அனைத்தும் வீணாகும் அபாயம் ஏற்படும். இதனால் நாங்கள் பெரும் நஷ்டத்திற்கு ஆளாவோம். எனவே உடனடியாக எங்கள் பகுதிக்கு அணையில் இருந்து நீர் திறந்து விட்டு கருகும் நிலையில் உள்ள நெற்பயிர்களை காப்பாற்ற நடவடிக்கை எடுக்க வேண்டும் என கோரிக்கை விடுத்தனர்.

**சின்னச்சின்ன செய்திகள்**

பதிவு செய்த நாள் : ஜூலை 07,2010,00:00 IST

மண்புழு எருவினை பிரித்தெடுக்கும் முறை: மண்புழு உற்பத்தி முறைகள் - தொட்டிமுறை, குழி முறை, படுக்கை முறை. நன்கு மக்கிய பயிர்க்கழிவுகள் மற்றும் சாணத்தை மண்புழுவிற்கு உரமாக தருவதால் ஒரு மாதத்திலேயே மண்புழு எருவினை எடுத்து பயன்படுத்தலாம். அதே சமயம் பாதியளவு மக்கிய, சரியாக மக்காதநிலையில் உள்ள பொருட்களை உணவாக்கி கொடுத்தால் 2 மாதங்கள் கழித்துத்தான் மண்புழு எருவினைப் பெறமுடியும்.

மண்புழு எருவினை சேகரிக்க முடிவு செய்தவுடன் தொட்டியில் நீர் தெளிப்பதை 2, 3, நாட்கள் நிறுத்தி வைக்க வேண்டும். மண்புழுக்கள் ஈரம் மிகுந்த அடிப்பகுதிக்குச் சென்றுவிடும். இச்சமயத்தில் நாம் மேலே பரப்பியுள்ள சிறுசிறு செங்கற்களின் இடையிடையே காணப்படும் மண்புழுவின் குருணை வடிவ கழிவுகளை சேகரிக்க வேண்டும். இக்கழிவுகளின் மீது நீர் தெளித்து ஈரத்தன்மையை பராமரிக்க வேண்டும். இக்கழிவுகளை நேரடியாக விளைநிலங்களில் இட்டு பயன்படுத்தலாம். மண்புழு எருவினை பைகளில் அடைத்து ஈரம் உலராமல் பாதுகாத்து 6 முதல் 8 மாத காலம் வரை பயன்படுத்தலாம். ஒரு கிலோ எடைக்கு சுமார் 1000 மண்புழுக்கள் இருக்கும். இவை ஒரு நாளில் பயிர்க்கழிவுகளை உண்டு 5-6 கிலோ எருவினைத் தருகின்றன. நன்கு புழுக்களை பராமரித்தால் ஒரு மாதத்திற்கு 150 கிலோ வரை எருவினை பெறலாம். நன்கு வளர்ச்சியடைந்த நிலையில் சுமார் 200 கிலோ வரை எரு கிடைக்கும். கிலோ 6 முதல் 8 ரூபாய் வரை விலை போகும். நெல்லுக்கும் சொட்டுநீர் பாசனம் அமைத்து அசத்திக் கொண்டிருப்பவர் சேலம் மாவட்டம், நாகியம்பட்டி அப்புத்தோட்டம் கே.கருப்பணன் என்ற விவசாயி.

ஏற்கனவே விவசாயி தன்னிடம் இருந்த சொட்டுநீர்க் குழாய்களை வைத்து 70 சென்ட் நிலத்தில் ஏ.டி.டி.45 ரக நெல்லுக்குதானே சொட்டுநீர் அமைத்துள்ளார். நிலத்தில் பல பயிர் சாகுபடி செய்து அவையெல்லாம் பூத்து வந்ததும் மடக்கி உழவு செய்துவிட்டு பின்னர் தொழு உரம் போட்டு பரம்படித்து நிலத்தை சமன்செய்து, நாற்றங்கால் மூலம் நாற்று தயாரித்து ஒற்றை நாற்று முறையில் ஒரு அடி இடைவெளியில் கயிறு பிடித்து நாற்று நட்டுள்ளார். பின்னர் 4 அடி இடைவெளிக்கு ஒரு குழாய் (லேட்ரல்) வருவதுபோல் 18 மி.மீ. குழாயை அமைத்து அதில் இரண்டரை அடி இடைவெளியில் ஒரு துளையிட்டு சிறிய குழாயை (மைக்ரோ டியூப்) சொருகிவைக்க வேண்டும். நடவு செய்த ஒரு வாரத்தில் தலா 2 லிட்டர் சூடோமோனாஸ், டிரைகோடெர்மா விரிடி உயிரி பூஞ்சாணத்தை சொட்டுநீரில் கலந்து நிலத்துக்கு கொடுக்க வேண்டும். இதுதவிர வேறு எந்த இடுபொருளும் கொடுக்கவில்லை. கோனோவீடரை கிழக்கு மேற்காக மட்டும் உருட்டி களை எடுக்க வேண்டும்.

இப்படிச் செய்வதால் சொட்டுநீர் குழாய்க்கு எந்த பாதிப்பும் வராது. விதை முளைத்ததிலிருந்து சுமார் 50 நாட்களில் பூ கரு உருவாகும். அதிலிருந்து 30 நாட்களில் பூ பூக்கும். அதிலிருந்து கதிர் முதிர்ச்சி அடைய 30 நாட்கள் ஆகும். வேர் பிடிக்கும் தருணம், பூக்கரு உண்டாகும் சமயம், பூக்கும் தருணம் நீர் பற்றாக்குறை ஏற்பட்டால் மகசூலில் பெரிய பாதிப்பு இருக்கும். மற்ற சமயங்களில் காய்ச்சலும் பாய்ச்சலும் இருந்தாலே போதுமானது. அரை மணி நேரம் பாய்ந்தாலே நிலம் ஈரமாகிவிடும். வழக்கமான முறையில் ஒரு ஏக்கர் நெல் சாகுபடி செய்வதற்கு தேவைப்படும் தண்ணீரை வைத்து சொட்டு நீர்ப்பாசனம் மூலம் 3 ஏக்கர் சாகுபடி செய்யலாம். வழக்கமான முறையில் 70 சென்டில் 20 மூடை (70 கிலோ) மகசூல் எடுப்பார். சொட்டுநீர் பாசனம் மூலம் கூடுதலாக 9 மூடை நெல் கிடைத்துள்ளது. அறுவடைக்கு அடுத்த நாளே குழாய்களை சுருட்டி

வைத்துவிட்டு உழவு ஓட்டிவிடலாம் என்கிறார் விவசாயி. தொடர்புக்கு: கே.கருப்பண்ணன், 97869 81299 (தகவல்: பசுமை விகடன், 25.6.10) ***-டாக்டர் கு.சௌந்தரபாண்டியன்***

**நவீன தொழில்நுட்பம் நெற்பயிரைத் தாக்கும் வேர்முடிச்சு நூற்புழு**

பதிவு செய்த நாள் : ஜூலை 07,2010,00:00 IST

நூற்புழு தாக்குதலின் அறிகுறிகள்: நாற்றுக்கள் அதிக அளவில் மடிந்து நாற்றங்கால் எரியூட்டப்பட்ட தோற்றத்துடன் காணப்படும். நாற்றுகளின் வளர்ச்சி குறைந்து மஞ்சள் நிறத்துடன் காணப்படும். நூற்புழு தாக்குதலின் அறிகுறிகளாக பயிரின் இளம் பருவத்திலேயே தாக்கினால் பயிரின் வளர்ச்சி தடைபடுகிறது. இலைகள் மஞ்சள் கலந்த பச்சை நிறமாகவோ அல்லது மஞ்சள் நிறமாகவோ காணப்படும். இலைகள் ஓரங்களிலிருந்து உள்நோக்கி காய்ந்து வருவதைக் காணலாம். சல்லி வேர்கள் அனைத்தும் தாக்கப்பட்டு வட்டவடிவமான அல்லது நீள் வடிவமான கொப்புளங்களை வெளிப்படுத்துகின்றன. இக்கொப்புளங்கள் சிறுநீரக வடிவத்தில் வேர்களின் நுனியில் காணப்படும். கொப்புளங்களை நுண்ணோக்கி கொண்டு பார்த்தால் நூற்புழுக்கள் நகர்வதைக் காணலாம். மேற்கூறிய அறிகுறிகள் தென்பட்டால் செடியைப் பிடுங்கி பார்த்து வேர் கொப்புளங்கள் இருப்பின் இந்நூற்புழு தாக்குதலை உறுதி செய்யலாம். நெற் பயிரினை நூற்புழுக்கள் மிகக் குறைந்த அளவே தாக்குவதாக கண்டறியப் பட்டுள்ளது. பொதுவாக குறைந்த நீர்ப்பாசன வசதியுடைய மணற்பாங்கான பகுதிகளில் விளைவிக்கப்படும் நெற்பயிரை இந்த நூற்புழுக்கள் அதிகம் தாக்குகின்றன.

இதுவரை இந்தியாவில் அசாம், மேற்கு வங்காளம், குஜராத், ஒரிசா, கர்நாடகா மற்றும் திரிபுரா மாநிலங்களில் வேர்முடிச்சு நூற்புழுவின் தாக்குதல் கண்டறியப் பட்டுள்ளது. தமிழகத்தின் எப்பகுதியிலும் நெல்லில் வேர்முடிச்சு நூற்புழு தாக்குதல் கண்டறியப்படவில்லை. தற்போது தஞ்சை மாவட்டத்தில் முதன்முறையாக பட்டுக்கோட்டை வேளாண்மை ஆராய்ச்சி நிலையத்தில் இந்த நூற்புழுவின் தாக்குதல் நெல்லில் அதிக அளவில் கண்டறியப்பட்டுள்ளது.

---

நூற்புழுக்களை கட்டுப்படுத்தும் முறைகள்: வேர்முடிச்சு நூற்புழு தாக்கிய வயலில் கார்போ பியூரான் (பியூரடான்) குருணை மருந்தை எக்டருக்கு 33 கிலோவிற்கு குறையாமல் மணலுடன் கலந்து இடவேண்டும். சூடோமோனாஸ் புளோரசன்ஸ் என்ற பாக்டீரிய எதிர் உயிர்க்கொல்லியை எக்டருக்கு 2.5 கிலோ வீதம் 50 கிலோ மக்கிய தொழு உரத்துடன் கலந்து இடுவதால் நூற்புழுவின் தாக்குதலை குறைக்கலாம். நிலத்தில் தொழு உரம், மக்கிய எரு போன்ற அங்கக பொருட்களை அதிக அளவில் கலப்பதால் நூற்புழுக்களின் எண்ணிக்கை குறைகிறது.

களைகள் கட்டுப்பாடு அவசியம். நூற்புழு தாக்காத நாற்றுக்களை தேர்வு செய்து நடவேண்டும். பயிர் சுழற்சி முறையாக பசுந்தாள் உரப்பயிர்களான சணப்பை, தக்கைப்பூண்டு, கொளுஞ்சி ஆகியவற்றை பயிரிட வேண்டும். வேப்பம்புண்ணாக்கு ஏக்கருக்கு 100 கிலோ என்ற அளவில் இடவேண்டும். நூற்புழு தாக்காத நெல் ரகங்களான சி.ஆர்.1009, ஐ.ஆர்.20, டி.கே.எம்.8, டி.கே.எம்.9, எம்.டி.யு.1, எம்.டி.யு.2 ஆகியவற்றைப் பயிர் செய்ய தேர்ந்தெடுக்கலாம். (தகவல்: ப.லதா, ப.சாந்தி, சி.நடராஜன், வேளாண்மை ஆராய்ச்சி நிலையம், பட்டுக்கோட்டை-614 602).

தினத் தந்தி

## *பால் உற்பத்தி அடுத்த 10 ஆண்டுகளுக்குள் 16.60 கோடி டன்னாக உயரும்*


*இக்கனாமிக் டைம்ஸ் செய்தி பிரிவு*
*மும்பை*

*பால் பொருள்கள் உற்பத்தி மற்றும் பயன்பாட்டில் உலக அளவில் இந்தியா முதலிடத்தில் உள்ளது. இந்தநிலையில், உள்நாட்டில் தனிநபர் செலவிடும் வருவாய் உயர்ந்து வருகிறது. இதனால் பால் பொருள்கள் பயன்பாடு அதிகரித்து வருகிறது. இதனை ஈடுகட்டும் வகையில் இவற்றின் உற்பத்தியை அதிகரிக்க மத்திய அரசு பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது. இதனையடுத்து வரும் 2020–ஆம் ஆண்டுக்குள் நாட்டில் பால் பொருள்கள் உற்பத்தி 16.60 கோடி டன்னாக அதிகரிக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.*

*சென்ற 2009–ஆம் ஆண்டின் பால் பொருள்கள் உற்பத்தியுடன் (10.85 கோடி டன்) ஒப்பிடும்போது இது, 53 சதவீதம் அதிகமாகும்*

*வரும் 2021–22–ஆம் ஆண்டிற்குள் பால் பொருள்கள் உற்பத்தியை 18 கோடி டன்னாக அதிகரிக்கும் வகையில், ரூ.17,371 கோடி மதிப்பிற்கான தேசிய பால் வள திட்டம் ஒன்றை அறிமுகம் செய்ய மத்திய அரசு திட்டமிட்டுள்ளது. அப்போது இந்தியாவில் பால் பொருள்களுக்கான தேவைப்பாடும் 17.20 கோடி டன்னாக இருக்கும்.*

## குன்னூர் அருகே அரசு விதைப்பண்ணையில் பூங்கா அமைக்கும் பணி தீவிரம் தோட்டக்கலை துறை இணை இயக்குனர் ஆய்வு



குன்னூர் அருகே காட்டேரி அரசு விதைப்பண்ணையில் பூங்கா அமைக்கும் பணியை தோட்டக்கலை துறை இணை இயக்குனர் தேவராஜ் ஆய்வு செய்த காட்சி.

*குன்னூர், ஜூலை.7–*

*குன்னூர் அருகே காட்டேரி அரசு விதைப் பண்ணையில் தோட்டக் கலை துறை சார்பில் பூங்கா அமைக்கும் பணி தீவிரமாக நடந்து வருகிறது. இதனை தோட் டக்கலை துறை இணை இயக்குனர் தேவராஜ் ஆய்வு செய்தார்.*

*அரசு விதைப்பண்ணை*

*தோட்டக்கலை துறையின் கீழ் குன்னூர் அருகே காட்டேரியில் மேட்டுப் பாளையம் ரோட்டில் அரசு விதைப்பண்ணை உள்ளது. இந்த விதைப்பண்ணை 47 ஏக்கர் நிலப்பரப்பில் உள்ளது. இங்கு தேயிலை மற்றும் பிளம், பேரி பழ மரங்கள் நடவு செய்யப்பட்டுள்ளன.*

*தோட்டக்கலை துறைக்கு தற்போது வருவாய் குறைவு ஏற்பட்டுள்ளதால், வருவாயை பெருக்கும் வகையில் குன்னூர்– காட்டேரி அரசு விதைப் பண்ணையில் 2 ஏக்கர் நிலப் பரப்பில் பூங்கா அமைக்க திட்டமிட்டது.*

*இணை இயக்குனர் ஆய்வு*

*இதற்கான ஆயத்த பணிகள் தற்போது தீவிரமாக நடைபெற்று வருகிறது. இந்த பணியை தோட்டக்கலை துறை இணை இயக்குனர் தேவராஜ் ஆய்வு செய்தார். ஆய்வுக்கு பின்னர் இணை இயக்குனர் தேவராஜ் நிருபர் களிடம் கூறியதாவது:–*

*நீலகிரி மாவட்டத்தில் ஊட்டி, குன்னூர், கோத்தகிரி ஆகிய பகுதிகளில் தோட்டக் கலை துறையின் கீழ் பூங்காக்கள் உள்ளன. நீலகிரி மாவட்டத் திற்கு வருகை தரும் சுற்றுலா பயணிகளை கவரும் வகையில் தோட்டக்கலை துறை முயற்சி எடுத்து வருகிறது.*

*இதன் அடிப்படையில் 2 ஏக்கர் நிலப்பரப்பில் பூங்கா அமைக்க நடவடிக்கை எடுக் கப்பட்டு வருகிறது. காட்டேரி அரசு விதைப்பண்ணையில் முதல் கட்டமாக ஆண்டு*

தோறும் பூத்து குலுங்கும் மலர்கள் நடவு செய்யப் படும்.

மலர் செடிகள்

சீசன் காலங்களிலும் ஏற்ற 25 வகையான 15 ஆயிரத்திற் கும் மேற்பட்ட மலர் செடிகள் நடவு செய்யப்படும். மாவட் டத்தின் நுழைவு வாயிலில் இந்த பூங்கா அமைந்து உள்ள தால், மாவட்டத்திற்கு வரும் சுற்றுலா பயணிகள் அதிக அளவு வருகை தரும் வாய்ப்பு உள்ளது. இந்த பூங்காவில் அலங்கார இருக்கைகள், குடைகள் அமைப்பதுடன், காட்சி கோபுரங்களும் அமைக் கப்படும். ½ ஏக்கர் நிலப்பரப் பில் வாகனம் நிறுத்துமிடம் அமைக்கப்பட உள்ளது.

வருகிற 2–வது சீசனுக்குள் பூங்கா அமைக்கும் பணியை முடிக்க நடவடிக்கை எடுக்கப் பட்டுள்ளது. சுற்றுலா பயணி களின் வருகையை கருத்தில் கொண்டு இந்த பூங்கா மேலும் விரிவு படுத்தப்படும்.

இவ்வாறு இணை இயக்கு னர் தேவராஜ் கூறினார்.